## முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
## O.S. No.45/2021

**வாதி தரப்பு சாட்சி** : 2

பெயர் : **திரு. ஆர்.பூபதிராஜ்**

தகப்பனார் / கணவர் பெயர் :

தொழில் :

கிராமம் :

தாலுகா :

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ம் நாள் வெள்ளிக்கிழமை திரு.ஸ்வர்ணம் ஜே.நடராஜன்.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, திருப்பூர் அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை.**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து ஆவண எண்.12351/2017 அந்த ஆவணம் சம்மந்தப்பட்ட சொத்திற்கான மதிப்பீட்டு, அது சம்மந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு சம்மன் வழங்கப்பட்டுள்ளது. அந்த சொத்திற்கு ஆவணம் பதிவு செய்த தேதியில் கரைப்புதூர் கிராமத்தில் க.ச.எண்.241/2 சி, 28.12.2017 அன்று சதுரஅடி 469 ரூபாய். தற்போது அதன் சதுரஅடி விலை 700 ரூபாய். ஆவணத்தில் ரூ.163.20 பைசா என சதுர அடி வீதம் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது. உரிய மதிப்பு நிர்ணயம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலர் முத்திரை, கோவை அவர்களுக்கு அசல் ஆவணத்துடன் அனுப்பி வைக்கப்பட்டது. அவர் விசாரணை மேற்கொண்டு இடத்தை ஆய்வு செய்து 4,19,53,750/- ரூபாய் என மதிப்பு நிர்ணயம் செய்து முத்திரைக்கட்டணம் அவர்களே வசூல் செய்தார்கள்.

2. அதற்கான பதிவுக்கட்டணம் நாங்கள் வசூல் செய்த பின்னர் 04.04.2018 அன்று ஆவணம் வழங்கப்பட்டது. 47 ஏ -க்கு மதிப்பு நிர்ணயம் செய்ய அனுப்புவதற்கு நாங்கள் முன்மொழிவு அனுப்பியுள்ளோம். அரசு வழிகாட்டு மதிப்பீட்டை பின்பற்றவில்லை என்று குறிப்பிட்டுள்ளோம். 469 ரூபாய் சதுரஅடி என பின்பற்றியிருந்தால் சொத்தின் மதிப்பு 10,08,68,000/- ரூபாய் என கணக்கீடு செய்ய வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டு முன்மொழிவுடன் அனுப்பினோம். ஆவணத்தில் இது

விவசாய பூமியாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் அது வணிக பூமி என்பதால் அரசு வழிகாட்டு மதிப்பீட்டு படி கணக்கிடவேண்டும். **மேற்கண்ட முன்மொழிவு, வருவாய் ஆணையர் பிறப்பித்த உத்தரவு, அன்றைய தேதியில் வழிகாட்டு மதிப்பீட்டின் பதிவேடு நகல், கிரைய ஆவண நகல் ஆகியவை மூ.சா.ஆ.1 (வரிசை).**

3. இந்த ஆவணம் குறித்த பதிவை வருமான வரித்துறைக்கு தெரிவித்துள்ளோம். வகைப்பாடு குறித்து ஆவணம் சமர்ப்பித்தால் மாவட்ட பதிவாளரிடம் முறையீட்டு உரிய வழிகாட்டு மதிப்பீடு திருப்பி அனுப்பப்படும். அவ்வாறு விண்ணப்பம் கொடுக்கப்பட்டால் அது குறித்த கருத்துரை எங்களிடம் கேட்கப்படும். அவ்வாறு கருத்துரை கேட்டு எதுவும் வரவில்லை. 47 ஏ உத்தரவிற்கு எதிராக மனுதாரர் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. பொதுவாக விவசாய நிலமாக இருந்தால் சதுர அடி கணக்கிற்கு மதிப்பீடு விலை நிர்ணயம் செய்யாமல் ஏக்கர் கணக்கிற்கு இருக்கும். இந்த குறிப்பிட்ட நிலத்திற்கு விலை நிர்ணயம் சதுரஅடியிலிருந்து ஏக்கர் கணக்கிற்கும் நாங்கள் மாற்றவில்லை.

4. கிரைய ஆவணத்தில் விவசாய நிலம் என எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதில் வேலி வகையறா மற்றும் கிணறு அடங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. Annexure–1A ல் வேலி குறித்தும் கிணறு குறித்தும் சேர்க்கவேண்டும் என்றால் சரியல்ல. கட்டிடங்கள் இருந்தால் மட்டும் சேர்க்கவேண்டும். கிணறு, வேலி இருந்ததால் கட்டாயமாக Annexure–1A வாங்கியிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. கட்டிடம் இல்லாததால் கள ஆய்வு பார்ப்பதற்கு அவசியம் இல்லை. கண்டிப்பாக நாங்கள் கிணறு வேலி இருந்ததால் கள ஆய்வு செய்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு கள ஆய்வு செய்திருந்தால் கட்டிடங்கள் இருந்தது தெரிந்திருக்கும் என்றும் எனவே முறையாக கிரைய மதிப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒரு ஆவணம் தாக்கல் செய்யும் போது அந்த ஆவணத்தின் முந்தைய உரிமையாளர் கையெழுத்து போட்டுக்கொடுத்தால் மட்டுமே ஆவணம் ஏற்றுக்கொள்வோம். அவர் இல்லாத சமயத்தில் அவரது வாரிசுதாரர்களும் தாக்கல் செய்யலாம்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**1.** சொத்து விவரத்தில் தீர்வை என்று குறிப்பிட்டாலே விவசாய பூமியைத்தான் குறிக்கும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 47 ஏ வின்படி

மாவட்ட வருவாய் அலுவலர் நிர்ணயம் செய்த மதிப்பு தான் இன்றைய தேதி வரை இறுதியானது என்றால் சரிதான். மதிப்பு நிர்ணயம் செய்ததற்கும், கூடுதலாக பதிவுக்கட்டணம் மற்றும் கூடுதல் முத்திரைக்கட்டணம் வசூல் செய்த விவரம் குறிப்பிபட்படட்டுள்து என்றால் சரிதான். கிரைய தொகை வாங்குபவரும் விற்பவரும் முடிவு செய்வது என்றால் சரிதான். இதுவரை குறைவாக மதிப்பீடு நிர்ணயம் செய்துள்ளோம் என எந்த வித புகாரும் இந்த சொத்து சம்மந்தமாக இதுநாள் வரை எழவில்லை என்றால் சரிதான். 47 ஏ வின் படி உரிய நடடவடிக்கை எடுத்து மேல் அதிகாரிகளுக்கு அவ்வப்போது தகவல் தெரிவிப்போம் என்றால் சரிதான். பூமியில் கிணறு மற்றும பம்புசெட் இருப்பதை வைத்து பார்க்கும்போது அதை விவசாய பூமி என நம்மால் அனுமானம் செய்ய முடியும் என்றால் சரிதான்.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2023.12.01 17:39:29 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**O.S. No.45/2021**

**வாதி தரப்பு சாட்சி : 3**

பெயர் : **திரு. P. சரவணக்குமார்**

தகப்பனார் / கணவர் பெயர் :

தொழில் :

கிராமம் :

தாலுகா :

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ம் நாள் வெள்ளிக்கிழமை திரு.ஸ்வர்ணம் ஜே.நடராஜன்.எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, திருப்பூர் அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை.**

1. நான் வருவாய் வருமான வரி துறையில் ஆய்வாளராக சர்க்கில்–1 திருப்பூரில் பணிபுரிந்து வருகிறேன். வாரியார் கிளாத்திங் கம்பெனி மற்றும் வாரியார் கார்மெண்ட்ஸ் கே.மனோகரன் ஆகியோரது வருமான வரிக்கணக்கை 2015–2016 லிருந்து 2019–2020 வரை ஆஜர் செய்யுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. மேற்கண்ட ஆவணங்களை ஆஜர் செய்கிறேன். அது அல்லாமல் கார்த்தி, ரவி மற்றும் அனுசியா ஆகியோரது டிடிஎஸ் விவரங்களை 12351/2017 சம்மந்தப்பட்ட கிரைய ஆவணத்திற்காக டிடிஎஸ் ஆஜர் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது. **இது சம்மந்தமாக நான் Authorization கடிதம் ஆஜர் செய்கிறேன். அது மூ.சா.ஆ.2.**

2. வாரியார் கிளாத்திங் கம்பெனி தனிநபர் நிறுவனம். அதன் உரிமையாளர் மனோகரன். அந்த நிறுவனத்திற்கு தனியாக PAN நம்பர் கிடையாது. மனோகரன் வருமான வரிக்கணக்குதான் அந்த நிறுவனத்திற்கான வருமான வரி கணக்கு. தனிநபர் வருமானவரிக்கணக்கு தாக்கல் செய்யும்போது வாரியார் கிளாத்திங் கம்பெனி தொடர்பான கணக்கையும் தாக்கல் செய்ய வேண்டும். வாரியார் கார்மெண்ட்ஸ்

பங்குதாரர் நிறுவனம். **2016-2017 ஆம் ஆண்டு Fixed Assets ரூ.9,76,41,880/-, 2017-2018 க்கான Fixed Assets ரூ.9,98,84,967/- 2018-2019 க்கான Fixed Assets ரூ.14,65,06,774/-, 2019-2020 க்கான Fixed Assets ரூ.15,58,71,750/-. இது மூ.சா.ஆ.3.**

4. ஒரு குறிப்பிட்ட Assets மேற்கண்ட கம்பெனி பெற்றிருந்தால் Balance Sheet-ல் பேலன்சாக காட்டப்பட்டிருக்கம். மதிப்பாக மட்டுமே காண்பிக்கப்பட்டிருக்கும் சொத்தாக காண்பிக்கப்பட்டிருக்காது. ஆடிட்டர் fixed assets-ன் விவரங்கள் இணைக்கப்பட்டிருந்தால் எங்களுக்கு தெரிய வரும். இந்த 2018-2019 க்கு அவ்வாறு இணைக்கப்படவில்லை. நீதிமன்றத்தில் நான் ஆஜர் செய்துள்ள Statements அத்தனையும் ஆடிட்டர் Statements தான். சொத்தினை வாங்குவதற்கான பணப்பரிமாற்றம் Assets Statement -ல் குறிப்பிட முடியாது. Assets Statement -ல் சொத்து வாங்கும் போது சொத்தின் மதிப்பீட்டை Assets ல் காட்டி வங்கியில் உள்ள கையிருப்பு பணம் அதற்கு ஈடாக குறைத்து காட்டுவார்கள். நிறுவனத்தின் மூலம் மேற்கண்ட நபர் ஈட்டக்கூடிய வருமானம் தொழில் ரீதியான வருமானமாக காட்டப்படும். Income from other Source என்றும் column உள்ளது. வருடாவருடம் அந்தக்காலமும் தொகை மாறும் என்றால் சரிதான்.

5. வாரியார் கார்மெண்ட்சின் வருமான வரிக்கணக்கு 2016-2017 முதல் 2019-2020 வரைக்கானதை ஆஜர் செய்கிறேன். இது பங்குதாரர் நிறுவனம். இதன் பங்குதாரர்கள் கே.மனோகரன், எம்.கவிதா மற்றும் ரமேஷ்குமார். இந்த பங்கு நிறுவனத்தில் கே.மனோகரன் பெறக்கூடிய வருமானமானது அவரது தனிநபர் கணக்கில் Income from Salary கணக்கில் காட்டமாட்டார். இந்த நிறுவனம் அது சம்மந்தமான வரி செலுத்தியதால் அவரது தனிநபர் வருமானம் கணக்கில்

காட்டவேண்டியதில்லை. இந்த வருமான வரிக்கணக்கிலும் Assets and liabilities காட்டப்பட்டுள்ளது. 2018–2019 தவிர மற்ற வருடங்கள் காட்டப்பட்டுள்ளது. வங்கியில் வாங்கக்கூடிய கடன்கள் Secured Loan என்ற பகுதியில் liability ஆக காட்டப்படும். இது மூ.சா.ஆ.4. பேலன்ஸ் சீட்டில் விவரங்கள் காண்பித்துள்ளார். Details Scrutiny குறித்து இரண்டு கணக்கிலும் செய்யப்படவில்லை.

6. மூன்று நபர்களின் டிடிஎஸ் பெயர் மட்டும் வைத்து பேன் நம்பர் இல்லாமல் டிடிஎஸ் எடுக்க முடியாது. பேன் நம்பர் குறிப்பிட்டிருந்தால் டிடிஎஸ் எடுக்க முடியும்.

**ஆவணங்கள் எடுத்து வர அனுமதிகோரியதன் பேரில் முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2023.12.01 17:39:40 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.